# ஒழுங்குவிதிகள்

22 ஆவது ஆண்டு

# சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கல்

2020



இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் 1999ஆம் ஆண்டு முதல், சிறந்த பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வை நடத்தி வருகின்றது. 2003ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், பத்திரிகைத்துறையில் சிறந்த தராதரத்தை உறுதி செய்ய வேண்டும் என்ற பொது இலட்சியத்தின் அடிப்படையில், விருதுக்குரிய ஆண்டில் திறமைகளை வெளிப்படுத்திய ஊடகவியலாளர்களுக்கு விருதுகளை வழங்கும் இந்நிகழ்வுக்கு, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து ஒத்துழைத்து வருகின்றது.

## சிறந்த பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கல் என்றால் என்ன?

ஊடகவியலாளர்களின் தொழில் ரீதியான தரத்தை மேம்படுத்துவதற்காகவும் சிறந்த ஊடகத்துறையை ஊக்குவிப்பதற்காகவும் என்ற நோக்கில் நடத்தப்படுகின்ற ஒரே விருது வழங்கும் நிகழ்வு இதுவாகும். மேலும் இவ்வாறு விருது வழங்குவதன் மூலம், ஊடகத்துறையில் சிறப்பாகச் செயலாற்றுவதன் ஊடாகச் சிறந்த படைப்புகளைச் செய்யும் ஊடகவியலாளர்களைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டுதல், ஊக்குவித்தல், அவர்களுக்கு தேசிய ரீதியாக அங்கிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையில், இந்த விருது வழங்கும் நிகழ்வு நடத்தப்படுகின்றது.

## யார் விண்ணப்பிக்கலாம்?

இலங்கையில் ஊடகவியலாளர்களாத் தொழில்புரியும் எவரும் விண்ணப்பிக்கலாம். இலங்கையில் வெளிவருகின்ற தினசரி அல்லது வாராந்த பத்திரிகைகளில் செய்தி அல்லது கட்டுரைகளை எழுதி, அவை இலங்கையில் உள்ள பத்திரிகைகளில் பிரசுரமாகிய ஊடகவியலாளர்கள் இந்த விருதுக்காக விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்களாவர். விருதுக்காக விண்ணப்பிக்கும் ஊடகவியலாளர்கள், முழுநேர ஊடகவியலாளர்களாக அல்லது விருதுக்குரிய காலப்பகுதியில் குறைந்தபட்சம் 10க்குக் குறையாத விடயங்கள் எழுதப்பட்டு அவை பிரசுரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

ஊடகத்துறை மாணவர்களாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டுப் பிர-சுரமாகிய கட்டுரைகள், செய்திகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும்.

## பத்திரிகைக்கான வரைவிலக்கணம்

பத்திரிகையானது ‘டப்லொய்ட’ அல்லது பரந்த அளவு பரப்பைக் கொண்ட தாளில் பிரசுரமாகக் கூடியதாக இருக்கலாம். அத்துடன் விண்ணப்பிக்கும் காலப்பகுதியில் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பத்திரிகையாக இருக்க வேண்டும். விண்ணப்பிக்கும் ஆண்டு முழுவதும் பிரசுரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். வேறொரு பத்திரிகையின் உள்ளே இணைக்கப்பட்டதாக இல்லாமல், தனியாக வெளிவரக்கூடிய பத்திரிகையாக அமைய வேண்டும்.

## பிரசுரமாகிய காலப்பகுதி

விருதுக்காக விண்ணப்பிக்கும் கட்டுரை அல்லது செய்திகள் அல்லது கருத்-துப்பட ஓவியங்கள் 2020 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் பிரசுரமாகியதாக இருக்க வேண்டும்.

## எவ்வாறு விண்ணப்பிப்பது?

விண்ணப்பங்களும் நியமனங்களும், பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்: ஏற்பாட்டாளர், சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கல், ஒழுங்குபடுத்தல் செயற்குழு, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், இல. 96, பேர்னாட் சொய்சா மாவத்தை (கிருல வீதி) கொழும்பு - 05.

## விண்ணப்ப முடிவுத் திகதி:

இறுதி விண்ணப்பத் திகதி ஜூலை 15, 2021 . திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை, விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதியில் நீட்டிப்பு வழங்கப்படாது என்பதை, தயவுசெய்து கவனிக்கவும்.

## விண்ணப்பிப்பதற்குரிய பொதுவான விதிமுறைகள்:

- விண்ணப்பப்படிவம், மூன்று பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரியின் பெயர், தெளிவான பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பத்துக்காக ஆக்கங்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படுவதாயின் அவை ஒவ்வொன்றும் பத்திரிகையின் ஆசிரியரின் கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரையுடன் இருக்க வேண்டும்.
- சமர்ப்பிப்புகள் ஒழுங்காகவும் உறுதியாகவும் 'பைன்ட்' செய்யப்பட்டிருக்க வேண்டும். உறுதி இல்லாததும் கழன்று போகும் வகையிலுமான சமர்ப்பிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- விண்ணப்பிக்கும் விருதுக்கான பிரிவானது, சரியாகப் புள்ளடியிடப்பட்டுக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பிரிவுக்குரிய கேட்கப்பட்ட எண்ணிக்கையான கட்டுரைகள், செய்திகள், புகைப்படங்கள் என்பன, உரிய முறையில் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- தேவைப்படும் பிரிவுகளுக்கான சமர்ப்பிக்க வேண்டிய விவரம், விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அந்த அறிக்கை, 250 சொற்களுக்கு மேற்படாததாகவும் அமைய வேண்டும்.
- விண்ணப்பதாரியான ஊடகவியலாளரும் அந்தப் பத்திரிகையும், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் அறிமுகம் செய்யப்பட்டு, கண்காணிக்கப்படுகின்ற பத்திரிகைத் துறையினருக்கான ஒழுக்கக்கோவைக்கு உடன்படுவதென்பதையும், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்படுவதென்பதையும் உறுதிசெய்யும் வகையில், உரிய இடத்தில்' பத்திரிகை ஆசிரியரின் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.
- புனைபெயர் பயன்படுத்தப்பட்டிருப்பதாயின், விண்ணப்பதாரியும் புனைபெயரில் விண்ணப்பிப்பவரும் ஒரே நபர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், பத்திரிகை ஆசிரியரால் முன்வைக்கப்படும் அத்தாட்சிக் கடிதம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஆசிரியர் விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர், விண்ணப்ப தாரியால் சமர்ப்பிக்கப்படுகின்ற விருதுக்கான துறையானது பொறுத்தமானதா என்பதை, பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். ஒரு துறைக்கு ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், குறித்த விண்ணப்பம் வேறும் ஒரு பிரிவுக்குப் பொருளத்தமானதா என்பதை, நடுவர் குழுவே தீர்மானிக்கும்.

விண்ணப்பதாரி, ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகைகளில் கடமை புரிபவராயின், விண்ணப்பதாரி எந்தப் பத்திரிகைக்குரியவர் என்பதை, குறிப்பிட்ட பத்திரிகையின் ஆசிரியரே தீர்மானிப்பார்.

பிரசுரிக்கப்பட்ட பின்னர் ஏதாவது திருத்தங்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தால், அதனையும் விண்ணப்பப்படிவத்தின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்க வேண்டும். பிரசுரத்துக்கு எதிராக வேறு ஏதாவது எழுத்துமூலமான முன்வைப்புகள் அல்லது விளக்கங்கள் செய்யப்பட்டிருந்தால், அதன் பிரதியையும் குறிப்பிட்ட செய்திப் பத்திரிகையின் பொறுப்பு வெளிப்பாட்டையும், விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

தேவைப்படும் பட்சத்தில், நடுவர் குழு விண்ணப்பதாரியை அழைத்து அதுபற்றிய கருத்தை அறிந்துகொள்ள முடியும்.

விண்ணப்பித்த பின்னர் அது தொடர்பாகச் செய்யப்படும் கருத்துப் பரிமாற்றம், விவரம் கோரல் அல்லது நடுவர்களை அச்சுறுத்தும் வகையிலான நடவடிக்கைகள், விண்ணப்பப்படிவத்தை நிராகரிக்கச் செய்வதற்குக் காரணமாக அமைந்துவிடும்.

## பிரிவுகள்

01. ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் டி சில்வா ஞாபகார்த்த விருது

ஒரு விருது.

ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் முதலாவது தலைவரைக் கௌரவிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுகின்றது. தலைசிறந்த பத்திரிக்கையாளராகவும் பத்திரிக்கையின் ஆசிரியராகவும் வெளிநாட்டுச்செய்தியாளராகவும் பத்தி எழுத்தாளராகவும் இருந்த அவரைக் கௌரவிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுவதால், இத்துறையில் தொடர்ச்சியாகச் சேவையாற்றியவர்கள் விண்ணப்பிக்கலாம். பத்திரிகைகளின் ஆசிரியர்களும் இதற்காக விண்ணப்பிக்கலாம். நாட்டில் பரந்தளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மக்கள் மத்தியில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாக அறிக்கையிடல்கள் அல்லது ஆக்கங்களை முன்வைத்தவர்கள், இவ்விருதுக்காக விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் தேவையான ஆதாரங்களை இணைத்து, சாதனைகளின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தும் வகையில், 250 சொற்களுக்கு மேற்படாத அறிக்கையொன்றையும் இணைத்து அனுப்பவேண்டும்.

02. ஆண்டின் சிறந்த புலனாய்வுச் செய்தியாளருக்கான விருது

ஒரு விருது.

தேசிய முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, தனிப்பட்ட ஒருவரால் அல்லது குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வுச் செய்திக்காக/அறிக்கைக்காக இவ்விருது வழங்கப்படுகின்றது.

குறிப்பாக பாரிய குற்றச் செயல்கள், அரசியல் விடயங்கள், ஊழல் மோசடிகள், நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பான துறைகளை அடிப்படையாகக் கொண்டு,

புலனாய்வுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். குறித்த புலனாய்வுத் தேடலில் பயன்படுத்தப்பட்ட ஊடகத் தொழில் தரம், தொழில்நுட்பம், அதன் சமூகத் தாக்கம் என்பன தொடர்பாக, நடுவர்கள் கவனம் செலுத்துவார்கள். இச்செய்தி, புதிய விறுவிறுப்பான செய்தியாக இருக்கத் தேவையில்லை. மக்களின் ஆர்வத்தையும் தேசிய முக்கியத்துவத்தையும் கொண்ட செய்தியொன்றின், தொடர்ச்சியாகவும் இருக்கலாம்.

புலனாய்வுச் செய்தி அல்லது அறிக்கையின் பிரதியுடன், பத்திரிகையின் ஆசிரியராலும் விண்ணப்பதாரியாலும் வழங்கப்படும், 250 சொற்களுக்கு மேற்படாத அறிக்கையொன்றையும் கூடவே சமர்ப்பிக்க வேண்டும்.

03. விறுவிறுப்பான செய்திக்கான விருது

ஒரு விருது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, நாட்டில் மக்கள் மத்தியில் விறுவிறுப்பை ஏற்படுத்தும் வகையில் ஊடகவியலாளரால் அல்லது ஊடகவியலாளர் குழுவொன்றால் பிரசுரிக்கப்பட்ட செய்திக்காக இந்த விருது வழங்கப்படுகின்றது. தனிப்பட்ட விண்ணப்பமாக இருந்தாலும், அணியாக வழங்கப்படும் விண்ணப்பமாக இருந்தாலும் சரி, குறித்த விடயம், விறுவிறுப்பான வகைச் செய்தியென்பதை உறுதிப்படுத்தும் வகையில், பத்திரிகை ஆசிரியரின் உறுதிப்படுத்தல் அறிக்கை வழங்கப்பட வேண்டும்.

04. ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் டி சில்வா ஞாபகார்த்த விருது

ஒரு விருது.

ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும். டென்சில் பீரிஸ் அவர்கள், இலங்கையின் சிறந்த செய்தியாளர்களில் ஒருவராகக் கருதப்பட்டார். அவரின் ஞாபகார்த்தமாக இவ்விருது வழங்கப்படுகின்றது.

நியாயமானதும் சரியானதுமான முறையில் செய்தித் தேடலில் ஈடுபட்டுத் திறமை-களை வெளிப்படுத்திய 26 வயதுக்கு குறைந்த (டிசெம்பர் 2017இல்) ஆண், பெண் இருபாலாரையும் சேர்ந்த செய்தியாளர்களுக்காக, இவ்விருது வழங்கப்படுகின்றது. சிறந்த முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செய்தித் தேடலில் ஈடுபட்ட மற்றும் கட்டுரைகளை எழுதிய இளம் செய்தியாளரைக் கண்டறிவதில், நடுவர்கள் ஆர்வமாக உள்ளனர். கேள்வி - பதில் வடிவில் காணப்படும் நேர்காணல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சிறந்த இளம் செய்தியாளருக்கான இவ்விருதைப் பெற்றுக்கொள்ளும் செய்தியாளருக்கு, வெளிநாடொன்றில் கல்வி கற்பதற்காக, லக்ஷ்மன் கதிர்காமர் அறக்கட்டளையால் வழங்கப்படும் புலமைப்பரிசில் ஒன்றும் வழங்கப்படும்.

05. ஆண்டின் சிறந்த சுகாதாரப் பராமரிப்புக்கும் மருத்துவ அறிக்கைக்குமான விருது (மும்மொழிகளிலும்)

ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் தலா ஒவ்வொரு விருது.

ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட

வேண்டும்.
சுகாதாரம் தொடர்பாகத் தொடர்ச்சியாகச் செய்திகளைச் சமர்ப்பித்த ஊடகவியலாளருக்கு, இவ்விருது வழங்கப்படுகிறது. சுகாதாரப் பிரச்சினைகள், அவற்றுக்கான சிகிச்சை, கட்டுப்படுத்தல் ஆகியன தொடர்பாக, வாசகர்களுக்கு விளக்கங்களை வழங்குவதாக இருக்க வேண்டும். அவை, ஊடக அறிக்கைகள் அல்லது பிரசுரங்களிலிருந்து பிரசுரிக்கப்படாமல், தேடிப் பெறப்பட்டனவாக இருக்க வேண்டும். சுகாதாரப் பிரச்சினை தொடர்பாகவும் அதன் கட்டுப்பாடு, சிகிச்சை தொடர்பாகவும் விளக்கமளிக்கும், வைத்தியர்களுடனான நேர்காணல், மருத்துவச் சொற்பிரயோகங்களுடன் காணப்படாமல், இலகுவான மொழியில் காணப்பட வேண்டும்.

06. ஆண்டின் சிறந்த சூழலியல் பத்திரிகையாளர் (மும்மொழிகளிலும்)
ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் தலா ஒவ்வொரு விருது.
ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.
சுற்றாடல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி சூழலைப் பாதுகாப்பதற்காகவும் சுற்றாடல் பாதிப்பை மக்களுக்கு எடுத்துக்கூறி வருடம் முழுவதும் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் மக்கள் மத்தியில் தாக்கத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் தகவல் வெளிப்படுத்திய பத்திரிகையாளர்கள் அல்லது குழுவினர், இந்த விருதுக்காக விண்ணப்பிக்க முடியும். சூழல் மாசடைதலைத் தடுக்கும் வகையிலும் துஷ்பிரயோகத்தை அம்பலப்படுத்தி அதிகாரிகளையும் மக்களையும் விழிப்படையச் செய்து, தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்த ஆக்கங்களை இந்த விருதுக்காகச் சமர்ப்பிக்க முடியும். விருதுக்கானவர்களை தெரிவு செய்வதில் நடுவர்கள், புலனாய்வு மற்றும் ஆழமாக தேடல் ஆர்வத்தை வெளிப்படுத்தியமை தொடர்பாக திறமைகள் குறித்து கவனம் செலுத்துவார்கள். மிகவும் பலமானவும், சமூகத்தின் தாக்கம் செலுத்தியதும், அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படத் தூண்டியதுமான, ஒரு செய்தியும், கருத்திற்கொள்ளப்படும்.

07. ஆண்டின் சிறந்த விளையாட்டுத்துறைச் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் தலா ஒவ்வொரு விருது.

ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

விளையாட்டுத்துறைக்கு சிறப்புச் சேர்க்கும் வகையிலும் ஊக்குவிக்கும் வகையிலும் வழங்கப்படுகின்றது. விளையாட்டுத்துறைச் செய்திகளை வெளியிடுவதில் தேர்ச்சி மிக்க பத்திரிகையாளர்களுக்காக இவ்விருது வழங்கப்படுவதோடு இத்துறையில் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள், தேவைகளை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வு தேடும் வகையில் முன்கூட்டியே அத்தகைய செய்திகள் தகவல்களை வெளியிடல், சேகரித்தல், ஆய்வு செய்தல் மற்றும் நேர்காணல் என்பதாகவும் அமையலாம்.

08. ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
ஒரு விருது
குறைந்தது 5 சமர்ப்பிப்புகள். பத்திரிகையின் பிரிவுகளோடு, முழுமையான பத்திரிகையும் காணப்பட வேண்டும்.
பொதுமக்களின் வரவேற்பைப் பெறும் வகையிலும் கவர்ச்சியாகவும் சிறந்த முறையிலும் வடிவமைக்கப்பட்ட பத்திரிகைகளுக்காக இவ்விருது வழங்கப்படுகின்றது. கவர்ச்சி மிகவும் பரபரப்பு மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பல்சுவை அம்சங்களுடன் வெளியாகிய பத்திரிகையை அடையாளம் காண்பதில், நடுவர்கள் ஆவலாக உள்ளனர்.

09. ஆண்டின் சிறந்த வணிகவியல், நிதியியல் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் தலா ஒவ்வொரு விருது.
ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.
வணிகம், நிதி, பொருளாதாரம் தொடர்பாக வாசகர் மத்தியில் தாக்கத்தையும் அறிவையும் புகட்டும் வகையிலும் வணிகம் தொடர்பான புரிதலை ஏற்படுத்தும் வகையில் எழுதப்பட்ட கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு சரியாகவும் நேர்மையாகவும் கடமையாற்றிய ஊடகவியலாளர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகீன்றது. ஆக்கங்கள் பத்திரிகைத் துறைசார் ஒழுக்கக்கோவையை அடிப்படையாகக் கொண்டு நியாயத்தன்மை, நம்பகத்தன்மை ஆகிய நெறிமுறைகளைக் கடைபிடித்ததாகவும் பத்திரிகைத்துறை ஒழுக்க நடைமுறைகளை அனுசரித்ததாக இருத்தல் வேண்டும். பொதுவான வாசகர்களுக்கு வணிக விடயங்கள் தொடர்பாக புதிய போக்குகளைப் புரிய வைத்தல், புதிய தகவல்களை வெளியிடல், எதிர்வுகூறல்களை மேற்கொண்டவர்கள் மற்றும் சிறப்பு விடயங்களை மையமாக வைத்து இத்துறையில் திறமைகளை வெளிப்படுத்தியவர்கள் குறித்து நடுவர்கள் கவனம் செலுத்தவுள்ளனர். கேள்வி - பதில் வடிவில் நேர்காணல்கள் காணப்படக்கூடாது. ஊடக வெளியீடுகளை அடிப்படையாகக் கொண்டு வெளியான செய்திகள், கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10. ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (மும்மொழிகளிலும்)
ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் தலா ஒவ்வொரு விருது.
ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.
கைப்பட வரைந்து அல்லது கணினியைப் பயன்படுத்தி வாசகர்களைக் கவரும் வகையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக ஓவியங்களை (கார்ட்டூன்) வரைந்தவர்களுக்காக, இவ்விருது வழங்கப்படுகீன்றது. மொழி என்ற சவாலைக் கடந்து நாட்டில் பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய பொதுப் பிரச்சினைகளை கலை மூலமாகவும் நகைச்சுவை மூலமாகவும் முன்வைத்து ஓவியங்களை வரைந்து, பொதுமக்கள் மத்தியில் இடம்பிடித்த ஓவியர்களைக் அடையாளம் காண்பதில், நடுவர்குழு ஆர்வமாக இருக்கின்றது.

11. விசேட நிலைமைகளில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி

நினைவு விருது (மும்மொழிகளிலும்)

ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் தலா ஒவ்வொரு விருது.

ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இலங்கையில் சுதந்திரமான தமிழ் பேசும் வாசகர்களுக்காகப் போராடிய, சிறப்புமிகு ஊடகவிலாளரும் கல்வியியலாளருமான ஒருவரை நினைவுகூரும் வகையில், இவ்விருது வழங்கப்படுகின்றது. நாட்டில் நெருக்கடி மிகுந்த சூழலில் இருந்துகொண்டு (அச்சூழல் குறிப்பிடப்பட வேண்டும்), அதன் மூலமாக அவர்களது தனிப்பட்ட, தொழில்முறை வாழ்க்கை அச்சுறுத்தலுக்கான நிலையில், அவர்களது உயிருக்கு ஆபத்தான சூழல் நிலவியபோது அல்லது விசேட சூழ்நிலைகளுக்குள்ளால் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்ட போது, மக்களுக்கு உண்மையை அறியச் செய்த ஊடகவியலாளருக்கு அல்லது ஊடகவியலாளர் அணியொன்றுக்கு, இவ்விருது வழங்கப்படுகிறது.

ஊடகவியலாளர் ஒருவரின் மரணத்துக்குப் பின்னர், பத்திரிகை ஆசிரியர் ஒருவர் அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவர் அல்லது பத்திரிகை ஆசிரியர் சங்க உறுப்பினர் ஒருவர் விண்ணப்பித்தால், மரணத்துக்குப் பின்னரும் இவ்விருது வழங்கப்படலாம்.

12. சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது

ஒரு விருது

ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

வருடத்தில் சிறந்ததும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதுமான முறையில் செய்திகளுக்கும் ஆக்கங்களுக்கும் புகைப்படங்களைத் திரட்டிய சிறந்த ஊடகவியலாளருக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது. இவ்வாறான புகைப்படப் பிடிப்பாளர்களால் எடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்திய புகைப்படங்களைப் கண்டறிவதில் நடுவர்குழு ஆவலாக உள்ளது. புகைப்படங்களின் குறிக்கோள், பண்புகள், தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவம் உட்பட அதனோடு சம்பந்தப்பட்ட விடயங்களை, சிறந்த புகைப்படப் பிடிப்பாளரிடம் இருந்து அறிவதற்கும் நடுவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஒவ்வொரு புகைப்படத்துக்கும் விளக்கம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். தெளிவற்ற புகைப்படங்கள், டிஜிட்டல் முறையைப் பயன்படுத்தி திரிபுபடுத்தப்பட்ட புகைப்படங்கள், தலைப்புச் செய்திகளுக்குள் உள்ளடக்கப்பட்ட புகைப்படங்கள் என்பன நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள், ஒரு கட்டத்துக்குள் காணப்பட வேண்டும்.

13. ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்தன விருது (மும்மொழிகளிலும்)

ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் தலா ஒவ்வொரு விருது.

ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

தலைசிறந்த எழுத்தாளராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் இருந்த பி.ஏ.சிறிவர்தனவுக்குக் கௌரவமளிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுகின்றது. சிறப்பான விடயங்களை முன்வைத்து மக்கள் மத்தியில்

பொது அபிப்பிராயத்தையும் எதிர் விவாதங்களையும் கட்டியெழுப்பும் வகையில் துணிச்சலுடன் தகவல் வெளியிட்ட (பத்தி) எழுத்தாளர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது. தொடர்ச்சியான பத்தி எழுத்தாளர்களாக இருக்க வேண்டும். விவரணங்கள், புனைபெயர்களிலும் அமையலாம் (பொதுவான விதிமுறைகளைப் பார்க்குக). இங்கு முக்கியமாக எழுத்தாளரின் தனித்துவமான பாங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விருதுக்கு எழுத்தாளர்களிடையே மொழி வல்லமை கவனத்தில் எடுக்கப்படும். குறித்த வருடத்துக்குள ் குறைந்தபட்சம் 12 விடயங்களாவது பிரசுரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அத்துடன் பத்தியானது, முழுப்பக்கத்தையும் உள்ளடக்கியதாக இல்லாது, ஒன்று அல்லது இரண்டு பத்திகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

14. ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது

ஒரு விருது

ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

தொழிலாளர்களின் குரலாகச் செயற்பட்டு அதற்காகத் தொடர்ச்சியாக குரல் எழுப்பும் நோக்கில் 1930ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீரகேசரிப் பத்திரிகையை ஆரம்பித்த சுப்பிரமணியம் செட்டியாரின் ஞாபகார்த்தமாக இவ்விருது வழங்கப்படுகின்றது. குரல் கொடுக்க யாரும் இல்லாத மக்களின் சமூகப் பிரச்சினைகளை நியாயமான முறையிலும் நடுநிலையாகவும் ஒழுக்கக் கோவையை கடைபிடித்ததாகவும் முன்வைத்து கட்டுரைகள் ஆக்கங்களை எழுதிய ஊடகவியலாளர்கள் இவ்விருதுக்காக விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் அவை மூலம் மக்களின் பிரச்சினைகள் வெளிப்படுத்தப்பட்டு தீர்வுகளை நாடச் செய்ததாக இருந்தால் வரவேற்கத்தக்கதாகும். சமூக விடயங்களை, கட்டுரைகள் மையப்படுத்தி இருக்க வேண்டும்.

15. ஆண்டின் சிறந்த விவரணக் கட்டுரையாளருக்கான உபாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)

ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் தலா ஒவ்வொரு விருது.

ஒரு விண்ணப்பத்துக்காக, குறைந்தபட்சம் 10 சமர்ப்பிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

மும்மொழிகளிலும் இவ்விருது வழங்கப்படும். உபாலி விஜேவர்தன பத்திரிகை நிறுவனத்தின் ஸ்தாபகராகிய உபாலி விஜேவர்தனவின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் இவ்விருதுக்காக பல்வேறுபட்ட விடயங்களையும் முன்வைத்து, மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் அறிவையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்த சமர்ப்பிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கட்டுரைகள் நியாயமானதாக அமைவதோடு சரியாகவும் உயர் ஊடக தார்மீகப் பொறுப்பை பின்பற்றியதாகவும் தெளிவானதாகவும் எழுதப்பட்டவைகளாக இருக்க வேண்டும். எழுத்தினதும் மொழியினதும் உயர் தராதரம் பேணப்பட்டிருக்க வேண்டும். செய்தி விவரணக் கட்டுரைகள் அல்லது சிறப்புக் கட்டுரைகள் இலகு நடையைக் கடைபிடிக்கும் சிறந்த விவரணக் கட்டுரையாளர்களை அடையாளம் காண்பதற்கு,

நடுவர்கள் தயாராக உள்ளனர். சமர்ப்பிப்புகள், நிச்சயமாகப் பிரச்சினைகளை மையப்படுத்தியதாக இருக்கத் தேவையில்லை. அவை, மனித விருப்பை வெளிப்படுத்துபவையாகவோ அல்லது பயணக் கட்டுரைகளாகவோ அமைய முடியும். நேர்காணல்கள், இவ்வகைக்கு உட்படுத்தப்படவில்லை.

16. சிறந்த செய்தி இணையத்தளம் (மும்மொழிகளிலும்)
ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் ஒவ்வொரு விருது.
அச்சடிக்கப்படும் பத்திரிகைகளின் செய்தி இணையத்தளங்களுக்கு மாத்திரம், இவ்விருது வழங்கப்படும். பத்திரிகையும் இணையத்தளமும், ஜனவரி 1, 2017இலிருந்து காணப்படுவதோடு, மதிப்பிடப்படும் இந்நேரத்திலும், தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். சிறந்த உள்ளடக்கங்கள், கட்டமைப்பு, நகர்த்தல், வடிவமைப்பு, வசதிகள், ஊடாடும் தன்மை ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள், இணையத்தளத்தின் வசதிகளை வெளிப்படுத்தி, அவற்றின் தனித்துவத்தைக் காட்டி, இணையத்தளத்தின் திரைகளின் படங்களை உள்ளடக்கி, 10 பக்கங்களுக்கு மேற்படாத, PDF வடிவிலான PowerPoint ஒன்றைச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள். மே, ஜூன் மாதகாலப் பகுதிக்குள், ஏழு நாட்கள் கொண்ட குறிப்பிட்ட காலப்பகுதிக்கும், செய்தி இணையத்தளங்களையும் PowerPoint அளிக்கைகளையும், நடுவர் குழாம் பரிசீலிக்கும்.

17. சிறந்த செய்தி / தகவலறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தி எழுதப்பட்ட விவரணம்
மூன்று மொழிகளிற்கும் தலா ஒவ்வொரு விருது.
கட்டுரையை எழுதுவதற்காக தகவல்களைப் பாதுகாக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி எழுதப்பட்ட செய்தி அல்லது விவரணத்தை இந்த விருது அங்கீகரிக்கின்றது. அந்தத் தகவல் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

## இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் வழங்கப்படும் விசேட விருதுகள்

- சக பத்திரிகையாளர்களினதும் பொதுமக்களினதும் மதிப்பை வென்றமைக்கான, டி.ஆர். விஜேவர்தன விருது.
- இலங்கையில் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான, சேபால குணசேன விருது.
- நீண்டகால, கௌரவ சேவை புரிந்தமைக்கான விருதுகள்.



5.பேனா விருது